# இந்தியத் துணைத் தூதரகம்
## யாழ்ப்பாணம்

### ஊடக அறிக்கை

### கண்டியில் உள்ள இந்தியாவிற்கான உதவி உயர்ஸ்தானிகர் திரு.தீரேந்திரசிங் அவர்களின் வடக்கு மாகாணத்திற்கான வருகை

கண்டியில் உள்ள இந்திய உதவி உயர்ஸ்தானிகர் திரு.தீரேந்திரசிங் அவர்கள் வடக்கு மாகாணத்திற்கு இரண்டு நாள் பயணமாக செப்டம்பர் 24ஆம் திகதி அன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார்.

அவர், யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் திரு. எஸ். பாலச்சந்திரன் அவர்களுடன் இணைந்து, வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்லஸ் அம்மையார் அவர்களை செப்ரெம்பர் 25ஆம் திகதி அன்று சந்தித்து கலந்துரையாடினார். இந்த சந்தர்ப்பத்தில் அவரது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இந்திய அரசினால் மேற்கொள்ளப்பட்ட பௌத்தமதம் தொடர்பான பல்வேறு திட்டங்கள் உட்பட பல்வேறு மக்கள் நலம் சார்ந்த திட்டங்கள் பற்றியும், இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டம் (ITEC) மற்றும் கலாச்சார உறவுகளுக்கான இந்திய பேராயம் (ICCR) திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் முழு புலமைப்பரிசில்களுடன் கற்பதற்கான தமது சந்தர்ப்பங்களை எவ்வாறு ஆர்வத்துடன் பயன்படுத்துகின்றனர் என்பதையும் விளக்கினார்.

கண்டியிலுள்ள இந்திய உதவி தூதரகம் இந்தி, யோகா, இசை மற்றும் நடனம் கற்றுக்கொள்வதற்கான வகுப்புகளையும் நடத்துகிறது. இந்தியாவுடன் இணைந்து செயல்படுவதற்கான பல்வேறு வாய்ப்புகள் குறித்தும், இந்திய வம்சாவளி தமிழர்கள் உட்பட இலங்கையின் அனைத்து தரப்புப் பயனாளிகளுக்கும் எவ்வாறு உதவிகள் வழங்கப்படுகின்றன என்பதையும் அறிய, தமது திட்டங்களை பார்வையிட வருமாறு அவர் அழைப்பு விடுத்தார்.

யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை சம்மேளனம் (CCIY) மற்றும் யாழ்ப்பாண வர்த்தகர் சங்கம் ஆகியவற்றின் மூத்த நிர்வாகிகளை திரு. சிங் சந்தித்து இந்திய முதலீடுகள் மற்றும் இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். அதன் பின்னர் மாகாணத்தின் மூத்த அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்து, தனது அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் இந்தியாவினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்கள் சார்ந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். மேலும், வட மாகாணம் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவற்றுக்கான சிறந்த நடவடிக்கைகள் பற்றியும் அவர் அறிந்து கொண்டார்.

நிகழ்வின் புகைப்படங்கள் சில இணைக்கப்பட்டுள்ளன.

**30 செப்ரெம்பர் 2020**
**யாழ்ப்பாணம்**